இறக்காமம் பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து இறக்காமம் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண உள்ளுராட்சி அமைச்சினால் ரூபா 10 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்ட அலுவலகக் கட்டிடத்தின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் திரண்ட நிதி மற்றும் நிலையான சொத்து என்பன அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சிறுவர் பூங்காவில் பொருத்தப்பட்ட 28 வகையான 29 விளையாட்டு உபகரணங்கள் தொடர்பில் மீளாய்வான்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,034,605 தொகை நிலையான சொத்தாகக் காட்டப்படாமையினால் திரண்ட நிதி மற்றும் நிலையான சொத்து என்பன அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட காணி கட்டிடங்களின் பெறுமதி ரூபா 3,476,675 மற்றும் பெறவேண்டிய இறைச்சிக்கடை குத்தகை பெறுமதி ரூபா 1,029,223 தொகைகள் தொடர்பில் விபரமான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | - | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், மூன்று வருட்ஙகளுக்கு மேலாக அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 265,993 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 02 வைப்புகள் தொடர்பில் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,174,034 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 1,637,187 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,536,847 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரிகளும் வரிகளும் | 30 | 44 | 44 | - | 65 | 26 | 26 | - |
| வாடகை | 4,075 | 3,787 | 3,684 | 1,132 | 4,600 | 5,191 | 5,191 | 1,029 |
| உரிமைக் கட்டணம் | 670 | 673 | 673 | - | 480 | 670 | 670 | - |
| ஏனைய வருமானம் | 2,258 | 1,991 | 1,991 | - | 1,433 | 1,768 | 1,768 | - |

2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 7,523,240 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 6,391,417 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 85% ஆக காணப்பட்டிருந்தது.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 305 வர்த்தக நிலையங்கள் மற்றும் 4,673 வீடுகள் மீது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 2,500,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

2.2.4 வாடகை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டில் JCB இனை வாடகைக்கு வழங்குவதன் மூலம் பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 31,600 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 முதல் 2010 ஆம் ஆண்டு வரை நிலுவையாகவுள்ள இறைச்சிக் கடை குத்தகை ரூபா 1,029,223 தொகை மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.5 விளம்பரப் பலகைகளுக்கான கட்டண அறவீடு

விளம்பரப் பலகைகளுக்கான 2014, 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 216,440 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் ரூபா 997,147 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட திண்மக்கழிவு மீழ்சுழற்சி நிலையத்திற்கு தேவையான இயந்திரங்கள் பொருத்தப்படாமையால் இன்றுவரை பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

(ஆ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,338,328 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட விலங்கு அறுக்கும் கொல்களமானது அருகாமையில் மயானம் அமைந்துள்ளமையை கருத்தில் கொள்ளாது அமைக்கப்பட்டுள்ளமையினால் பொதுமக்களின் எதிர்ப்புகளிற்கு மத்தியில் அதனை இன்று வரை பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது.

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான

அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) அலுவலக கட்டிடம், பொது நூல் நிலையம், பொதுச் சந்தை, பொது விளையாட்டு மைதானம் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள 06 காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையிலுள்ள வாகனங்களுக்குரிய வருமான உத்தரவுப் பத்திரங்களை உரிய காலத்தில் பெறத்தவறியமையால் மீளாய்வாண்டு இறுதிவரை தண்டப்பணமாக ரூபா 3,815 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

(இ) 2010 ஆம் ஆண்டில் புதிய அலுவலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக முற்றாக அழிக்கப்பட்ட பழைய அலுவலகக் கட்டிடத்தின் கிரயம் ரூபா 4,122,181 தொகையானது சபையின் முகாமைத்துவக் குழுவின் தீர்மானமின்றி கணக்ககளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

3.3 ஆளணி முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட சபையின் வருமானப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படாததினால் வருமான வழிகளை இனங்காணல் மற்றும் வருமான அறவீடு போன்ற செயற்பாடுகளை திறன்பட செயற்படுத்தப்படாது காணப்படுகின்றது.

(ஆ) 2015 செப்டம்பர் 01 ஆந் திகதி பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு சபையிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளி இதுவரை சபைக்கு மீண்டும் விடுவிக்கப்படாததினால், கழிவகற்றல் மற்றும் சுகாதார வேலைப்பாடுகளுக்கு ஆளணி பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படுதல். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |